DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C. No. 161/2018 |
| Deposition of witness | : | PW – 1 |
| Name | : | கார்த்தி |
| Father's /Husband Name | : | கணேசன் |
| Village | : | கொல்லாபுரம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 32 |
| Occupation | : | ஓட்டுனர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 05th day September 2024. Accused A1 to A3 present. A4, A5 absent petition U/sec. 317 Cr.P.C filed and allowed.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது கொல்லாபுரத்தில் குடியிருந்து ஓட்டுனராக வேலை பார்த்து வருகிறேன். சாட்சி லல்லிபாய் என்பவரை எனக்கு தெரியும். எதிரிகளை எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியளிக்கப்பட்டது)

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 30.11.2017ம் தேதி மாலை 05.35 மணிக்கு நான் என்னுடைய ஆட்டோவில் சாட்சி லல்லிபாய் என்பவரை அழைத்து வந்தபோது 1 முதல் 4 எதிரிகள் எனது ஆட்டோவை வழிமறித்த ஆட்டோவில் இருந்த லல்லிபாயை அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும் 1 முதல் 4 எதிரிகள் லல்லிபாயை கையால்அடித்தார்கள் என்றும் பெண் என்றும் பாராமல் அவரது ஆடையை பிடித்து கிழித்தார்கள் என்றும் 1–வது எதிரி லல்லிபாயை பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும், போலிசார் விசாரித்தார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.